# இரும்பின் குரல்

இது ஒரு AMMAN - TRY-ன் முயற்சி

திருச்சி | மே 2022 | 12 பக்கம் | இலவசம் | பதிப்பு 5


# ஸ்ரீ முத்துமலை முருகன்



## உலகிலேயே மிக உயரமான ஸ்ரீ முத்துமலை முருகன் திருக்கோவில் கும்பாபிஷேகம்

உலகிலேயே மிக உயரமான 146 அடி உயரம் கொண்ட ஸ்ரீ முத்துமலை முருகன் திருக்கோவிலின் மஹா கும்பாபிஷேகம் ஏப்ரல் மாதம் 6-ஆம் தேதி சேலம் மாவட்டம் ஏத்தாப்பூர், புத்திரகவுண்டம்பாளையத்தில் வெகு சிறப்பாக நடைபெற்றது.

திருக்கோவிலின் திருப்பணிக்காக பயன்படுத்தப்பட்ட கம்பிகள் அனைத்தும்

**AMMAN-TRY** TMT BARS

கம்பிகள் என்பதில் பெருமிதம் கொள்கிறோம்.

# AMMAN-TRY-ன்
## புதிய அலுவலக
## ஸ்ரீ லட்சுமி கணபதி பூஜை

2022-ஆம் ஆண்டு மார்ச் மாதம் 14-ஆம் தேதி திருச்சி மன்னார்புரம், மெயின் ரோட்டில் புதிதாக அமைந்திருக்கும் எங்களது அலுவலகத்தில் ஸ்ரீ லட்சுமி கணபதி பூஜை நடைபெற்றது. இந்நிகழ்வில் எங்களது விற்பனையாளர்கள், முகவர்கள், வாடிக்கையாளர்கள், தொழிலாளர்கள், உறவினர்கள் மற்றும் நண்பர்கள் அனைவரும் கலந்து கொண்டு விழாவினை சிறப்பித்ததற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறோம். ■










# பார் பெண்டர்கள் சந்திப்பு




பார் பெண்டர்கள் சந்திப்பு 23.12.2021 அன்று எங்கள் அங்கீகாரம் பெற்ற விற்பனையாளர் ஸ்ரீ விநாயகா டிரேடர்ஸ் நிறுவனத்தில், (மீன்சுருட்டி) நடத்தப்பட்டது. இந்நிகழ்ச்சியில் சுமார் 180 பேர் கலந்து கொண்டனர்.




24.12.2021 அன்று RBM டிரேடர்ஸ், பந்தநல்லூர் டீலர் மூலமாக நெய்குப்பை சுவாமிநாதன் மண்டபத்தில் பார் பெண்டர்கள் சந்திப்பு நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் 70 பேர் கலந்து கொண்டனர்.




ஸ்ரீ வெங்கடேஸ்வரா ஹார்டுவேர்ஸ், போச்சம்பள்ளி, சார்பாக பார் பெண்டர்கள் சந்திப்பு 24.02.2022 அன்று ஸ்ரீவெங்கடேஸ்வரா கிராண்டு பேலஸ்-ல் நடைபெற்றது. இதில் 250 பார் பெண்டர்கள் மற்றும் 20 பொறியாளர்கள் கலந்து கொண்டனர்.

E.P & Co., திருநாகேஸ்வரத்தில் 16.03.2022 அன்று பார் பெண்டர்கள் சந்திப்பு நடைபெற்றது. இதில் 50-க்கும் மேலான பார் பெண்டர்கள் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்ச்சிகளில் பங்குபெற்ற அனைவருக்கும் பரிசுப்பொருட்கள் வழங்கப்பட்டது. ■









# பொறியாளர்கள் சந்திப்பு

## தஞ்சாவூர், அரியலூர், மதுரை, திருச்சி தர்மபுரி, திருப்பத்தூர், திருப்பூர் & சேலம்












AMMAN –TRY நிறுவனத்திலிருந்து QC, Production மற்றும் Sales Team இணைந்து பல்வேறு பொறியாளர்களை நேரில் சந்தித்து நமது கம்பியின் சிறப்பம்சங்கள் பற்றி விவரித்தார்கள்.

- 25.12.2021 அன்று மீன்சுருட்டி, பந்தநல்லூர் மற்றும் அதை சுற்றியுள்ள பகுதிகளில், பொறியாளர்களைச் சந்தித்து AMMAN – TRY TMT கம்பிகளின் தரம் பற்றியும் பிற லோக்கல் பிராண்டுகளுக்கு இடையிலான தரவேறுபாட்டை பற்றியும் விளக்கினார்கள். பின்னர் அவர்களுக்கு புத்தாண்டு வாழ்த்துகள் தெரிவித்து பரிசுகள் வழங்கப்பட்டது.

- 05.01.2022 முதல் 07.01.2022 வரை எங்களது விற்பனையாளர்கள் ஆகிய PSY Hardware , SKS Steels, Shakthi Steels -Madurai மற்றும் VCS Yagavi Traders - Natham உடன் இணைந்து பொறியாளர்களை சந்தித்தார்கள்.

- 23.02.2022 முதல் 26.02.2022 வரை Arul Steels-Tiruppur விற்பனையாளருடன் இணைந்து பொறியாளர்கள் சந்திப்பு நடைபெற்றது. அதே தினம் சேலம் மாநகரிலும் பொறியாளர்கள் சந்திப்பு நடைபெற்றது.

- 25.02.2022 அன்று Trichy Steels – Thirupathur மற்றும் 26.02.2022 அன்று Annamalaiyar Traders – Dharmapuri விற்பனையாளர்களுடன் இணைந்து பொறியாளர்கள் சந்திப்பு நடைபெற்றது.

- திருச்சி மாநகரை சுற்றியுள்ள உறையூர், தில்லை நகர், No.1 டோல்கேட், கே.கே. நகர், ஸ்ரீரங்கம், திருவானைக்கோவில், இலால்குடி ஆகிய பகுதிகளில் கட்டிட வடிவமைப்பாளர்கள் மற்றும் பொறியாளர்களை சந்தித்து, அவர்களுக்கு AMMAN-TRY நிறுவனத்தின் சார்பாக Diary, Calendar மற்றும் Measuring Tape வழங்கப்பட்டது. ■

# அன்பளிப்பாக சுவர்கடிகாரம் வழங்குதல்

**AMMAN–TRY நிறுவனத்தின் சார்பாக தமிழகம் முழுவதும் உள்ள புகழ்பெற்ற வழிபாட்டுத் தலங்களுக்கு சுவர் கடிகாரம் வழங்கப்பட்டது. அவற்றின் விவரங்கள் பின்வருமாறு**

- அருள்மிகு சங்கரநாராயண சுவாமி திருக்கோவில் - சங்கரன்கோவில்
- அம்மையார் கோவில் - காரைக்கால்
- புனித லூர்து அன்னை ஆலயம் - நாகப்பட்டினம்
- நாகூர் ஆண்டவர் தர்கா - நாகப்பட்டினம்
- அருள்மிகு காசி விஸ்வநாதர் ஆலயம் - தென்காசி
- தண்டாயுதபாணி திருக்கோவில் - திருக்காட்டுப்பள்ளி
- சனீஸ்வரர் கோவில் - திருநள்ளாறு
- ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம் - திருவப்பூர், புதுக்கோட்டை
- பூமிநாதன் கோவில் - மண்ணச்சநல்லூர்
- பிரம்மனார் கோவில் - திருப்பத்தூர்
- தண்டாயுதபாணி திருக்கோவில் - செட்டிக்குளம்
- சுப்ரமணிய சுவாமி திருக்கோவில் - விராலிமலை

















# BIS
## EXPOSURE VISIT










BIS - ன் வேண்டுகோளுக்கு இணங்க பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களுக்கான Industry Exposure Visit எங்கள் நிறுவனத்தில் 24.03.2022 அன்று ஏற்பாடு செய்து மாணவர்களுக்கு கம்பி தயாரிப்பு முறை, பரிசோதனை முறை, மற்றும் அதன் முக்கியத்துவம் பற்றி விளக்கம் அளித்தோம். ■

**நன்றி திரு.ரமேஷ்**

Joint Director, BIS, Madurai Branch office.

# BUILD EXPO
## Tiruppur

31.12.2021 முதல் 03.01.2022 வரை திருப்பூர் வித்யாகார்த்தி திருமண மண்டபத்தில் நடந்த Build Expo – வில் AMMAN –TRY நிறுவனம் பங்கேற்றது. இந்த நிகழ்விற்கு வருகை தந்தவர்களுக்கு எங்களது Sales Team, AMMAN –TRY TMT கம்பிகளில் பயன்படுத்தப்படும் மூலப்பொருட்கள் பற்றியும், கம்பிகள் தயாரிக்கும் முறை பற்றியும் மற்றும் அதன் சிறப்பம்சங்கள் பற்றியும் விரிவான விளக்கம் அளித்தார்கள். ■






# AMMAN -TRY-ன் பொது நல சேவைகள்





மாணவிகள் மற்றும் பெண்கள் பயன்பெறும் வகையில் அவர்களின் நலன் கருதி நமது நிறுவனத்தின் சார்பாக Trichy Law College மற்றும் Trichy City Corporation–ற்கு Sanitary Pad Disposer Machines வழங்கப்பட்டது. இந்த பொதுநல சேவையானது சுற்றுச்சூழலை பாதுகாக்கும் நோக்கத்தில் நமது மாநகரை தூய்மையாக வைத்துக் கொள்ள உதவும் எங்களின் சிறிய பங்களிப்பு. ■

## தன்னிறைவுத் திட்டம்

நமது நிறுவனம் தன்னிறைவுத் திட்டத்தின் மூலமாக நாகமங்கலம் ரோடு முதல் சிலம்புடையான்பட்டி ரோடு வரை சுமார் 1000 மீட்டர் நீளம் உள்ள தார்சாலை அமைத்து கொடுத்துள்ளது. இந்த தார்சாலை அமைத்ததன் மூலமாக சிலம்புடையான்பட்டி மலர் நகரைச் சுற்றியுள்ள கிராம மக்கள் பயன்பெறுகின்றனர். மேலும் மின்கம்பம் மற்றும் மின் விளக்குகள் அமைத்துக்கொடுத்துள்ளோம். ■













# ஸ்ரீ முத்துமலை முருகன் கோவில் அன்னதானம்

ஏத்தாப்பூரில் நடைபெற்ற முத்துமலை முருகன் திருக்கோவில் கும்பாபிஷேகத்தில் AMMAN-TRY நிறுவனம் சார்பாக அன்னதானத்திற்கு ரூபாய் ஐந்து லட்சம் **(Rs. 5,00,000-)** நன்கொடையாக வழங்கப்பட்டது






## கோடை வெயிலின் வெப்பத்தை தணிக்க AMMAN –TRY- ன் பங்களிப்பு

- கோடை வெயிலின் வெப்பத்தை தணிக்க மக்களுக்கு உதவும் வகையில், வண்டியூர், மதுரை அருள்மிகு மாரியம்மன் தெப்பக்குளம் திருக்கோயிலில் பங்குனி உத்திர விழாவில் நமது நிறுவனத்தின் சார்பாக பொது மக்களுக்கு நீர் மோர் வழங்கப்பட்டது,
- திருவாரூர், மடப்புரம் அருள்மிகு பெரியாண்டவர் கோயில் கும்பாபிஷேகத்தில் நமது நிறுவனமும், எங்களது விற்பனையாளராகிய C.M STEEL - லும் இணைந்து தண்ணீர் பந்தல் அமைத்து தொப்பிகள் வழங்கினோம்.
- குமரகிரி அருள்மிகு தண்டாயுதபாணி திருக்கோவிலின் பங்குனி உத்திர பெருவிழாவில் நமது நிறுவனமும் எங்களது விற்பனையாளராகிய அய்யனார் ஸ்டீல் டிரேடர்ஸ் உடன் இணைந்து நீர் மோர் வழங்கினோம்.
- ஸ்ரீ வில்லிபுத்தூர், பெரிய மாரியம்மன் கோவில் பூக்குழி விழாவில், நமது நிறுவனமும் எங்களது விற்பனையாளர் ஆகிய காமாட்சி அம்மன் டிரேடர்ஸ் - ம் இணைந்து மக்களுக்கு நீர் மோர் வழங்கினார்கள். ■









# விற்பனையாளர்களின் புதியகடை மற்றும் புதிய கிளை

# திறப்பு விழா

எங்களது விற்பனையாளர்களின் புதிய கடை மற்றும் புதிய கிளை திறப்பு விழா சிறப்பாக நடைபெற்றது. அனைத்து விற்பனையாளர்களுக்கும் AMMAN –TRY நிறுவனத்தின் சார்பாக வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறோம், அதன் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.




**Arul Cement & Steel - Tiruppur (New Branch)**




**GRS Enterprises - Kallal (New Shop)**




**Trichy Steels - Manapparai (New Shop)**




**Vairam Steel - Dharapuram (New Branch)**



# புதிய வீட்டின் கட்டுமானத்திற்கான சரியான TMT கம்பிகளை எவ்வாறு தேர்வு செய்வது?

**“நமது கனவு வீட்டைக் கட்டத் திட்டமிடும் போதெல்லாம், முதலில் நம் நினைவுக்கு வருவது வலுவான அடித்தளம். அதற்கு சிறந்த தரமான கட்டுமானப் பொருட்களைப் பயன்படுத்த வேண்டும். ஒவ்வொரு கட்டிடத்தை பார்க்கும் பொழுது நம் நினைவிற்கு வருவது கட்டுமான கம்பிகள். நமது புதிய வீட்டின் கட்டமைப்பை வலுப்படுத்த சிறந்த TMT கம்பிகளைத் தேர்ந்தெடுப்பது மிகவும் முக்கியமானது.”**

## TMT கம்பிகள் என்றால் என்ன?

நாம் அனைவரும் TMT கம்பிகள் என்று சொல்கிறோம். அது என்னவென்றால், (Thermo Mechanical Treatment) உறுதியான வெளிப்புற கோர் மற்றும் மென்மையான உள் மையத்துடன் அதிக வலிமை கொண்ட வலுவான கம்பிகளை உருவாக்கப் பயன்படும் முறையாகும். TMT கம்பிகள் BELGIUM TEMPCORE தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி தயாரிக்கப்படுகின்றன. இது கம்பிகளை வலுவாகவும், நெகிழ்வாகவும் செய்கிறது. இது இயற்கை பேரழிவுகளுக்கு எதிராக மேம்பட்ட பாதுகாப்பை வழங்கும் இழுவிசை வலிமைக்கு பெயர் பெற்றது. கம்பிகளின் ஆயுள் அவற்றின் துரு அரிப்பு மற்றும் துரு எதிர்ப்பு திறன்களைப் பொறுத்தது. Ribbed TMT கம்பிகள் எந்தவொரு கான்கிரிட் கட்டமைப்பிற்கும் சிறந்த வலுவூட்டலை வழங்குகின்றன, இதனால் நில அதிர்வுகள் ஏற்படும்போது சேதம் குறைகிறது. அதிக நெகிழ்வுத்தன்மை மற்றும் நீட்சித்தன்மை ஆகியவை சிறந்த TMT கம்பிகளுக்கான முக்கிய குணங்களாகும்.





## சிறந்த TMT கம்பிகளை தேர்ந்தெடுப்பதற்கான காரணிகள்?

TMT கம்பிகளை தேர்ந்தெடுப்பதற்கு முன்பு சரிபார்க்க வேண்டியவை:

- கம்பியின் கிரேடு ( Fe 500D, Fe 550D போன்றவை).
- சான்றிதழ் சரிபார்ப்பு (இதில் ISO, BIS போன்றவை இருக்க வேண்டும்), TMT கம்பிகளை உருவாக்க சமீபத்திய தொழில் நுட்பத்தைப் பயன்படுத்துதல்.
- கம்பிகள் அதிக weldability கொண்டதாக இருக்க வேண்டும். ஏனெனில், கட்டிடங்களின் கட்டுமான அமைப்பு மாறாமலும் மற்றும் நெகிழ்வுத்தன்மையோடும் வைத்து கொள்ள இவை பயன்படுத்தப்படுகின்றன.

TMT கம்பிகளின் வெப்ப எதிர்ப்பு பண்புகளானது தீ விபத்துகள் மற்றும் பிற இயற்கை பேரழிவுகளை தாங்குவதற்கு உதவுகின்றன. ஒவ்வொரு கட்டுமானத் திட்டத்திற்கும் வெவ்வேறு தேவைகள் உள்ளன. எனவே உங்கள் திட்டத்திற்கு ஏற்ப கிரேடு வகை, அளவு மற்றும் அம்சங்களில் சரியான கம்பிகளை தேர்வு செய்வதை எப்போதும் உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள். நீங்கள் TMT கம்பிகளை வாங்குவதற்கு முன் பொறியாளர்கள் மற்றும் கட்டிட வடிவமைப்பாளர்களுடன் கலந்து ஆலோசிப்பது மிகவும் நல்லது.

## துரு அரிப்பு மற்றும் துரு எதிர்ப்பு தன்மைகள் :

இந்தியாவில் தட்ப வெப்பம் மிகவும் சூடாகவும் ஈரப்பதமாகவும் இருக்கும். எனவே கட்டிடத்தின் ஆயுளை மேம்படுத்தி துரு அரிப்பை எதிர்க்கும் இரும்புக் கம்பிகளைத் தேர்ந்தெடுப்பது சிறந்தது.

## AMMAN -TRY TMT கம்பிகளை ஏன் தேர்வு செய்ய வேண்டும்?

எந்த ஒரு கட்டிட கட்டுமானத்திலும், TMT கம்பிகள் ஒரு முக்கிய அங்கமாகும். ஏனெனில் கட்டிடத்தின் முழு அமைப்பையும், வலிமையையும் இந்த TMT கம்பிகள் தாங்குகின்றன. எனவே கம்பிகளை வாங்குவதற்கு முன் நன்கு ஆராய்வது சிறந்தது. AMMAN-TRY கடந்த 44 ஆண்டுகளாக கட்டுமான கம்பி உற்பத்தி மற்றும் வணிகத்தில் முன்னணியில் உள்ளது. எனவே உங்கள் கனவு இல்லத்திற்குத் தேவையான வலிமை, ஆயுள், துரு எதிர்ப்பு, நீட்சித்தன்மை மற்றும் நெகிழ்வுத்தன்மை ஆகியவற்றை சரியான அளவுகள் கொண்ட சிறந்த TMT கம்பிகளை வழங்குகிறது.

**எங்களின் AMMAN -TRY TMT கம்பிகளைக் கொண்டு உங்கள் கனவு வீட்டைக் கட்டுங்கள்.**

AMMAN-TRY
TMT BARS

# நிறுவன
# புதிய அலுவலகம்



IS : 2830 IS : 14650 IS : 1786

**AMMAN-TRY STEELS PVT LTD.,**
No. 15 & 16, Mannarpuram Main Road, Mannarpuram
Trichy – 620 020. For Support +91 75503 01234

info@ammantry.com www.ammantry.com Follow us...